IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP.No.258/2016 Date: 07.11.2024.

PW1-செல்வி

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

விபத்திற்கு இறந்து போன கேசவனின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் முழு காரணம் என்றால் சரியல்ல. அந்த உண்மையை மறைத்து இழப்பீடு பெறும் எண்ணத்தில் 1ம் எதிர்மனுதாரர் மீது பொய்யாக போலீஸ் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக குற்ற வழக்கில் தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களுக்கிடையே எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 4ம் எதிர்மனுதாரரின் அனுமதியுடன் 1ம் எதிர்மனுதாரர் விபத்தின் போது வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரியல்ல. அதனால் 1, 4 எதிர்மனுதாரர்கள் மட்டும் தான் எனக்கு இழப்பீடு செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. என் மகனுடைய வேலை, வருமானம், வயதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் கடந்த 17.11.2017 அன்று 3ம் எதிர்மனுதாரருக்கு விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை விற்பனை செய்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. 3ம் எதிர்மனுதாரர் கடந்த 02.12.2017 அன்று 4ம் எதிர்மனுதாரருக்கு விபத்து ஏற்படுத்திய அந்த இருசக்கர வாகனத்தை விற்பனை செய்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. அதனால் விபத்தின் போது 4ம் எதிர்மனுதாரர் தான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

Sd/-செல்வி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.